# வணிகவரித்துறை

| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| முனைவர். டி. ஜகந்நாதன், இ.ஆ.ப.,<br>வணிகவரி ஆணையர்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை – 600 005. | இணை ஆணையர்கள் (வவ)<br>சென்னை (மையம்), (வடக்கு), (தெற்கு), திருவள்ளூர், காஞ்சிபுரம் செங்கல்பட்டு, கோவை, ஈரோடு, திருப்பூர், வேலூர், கடலூர், திருச்சி, சேலம், ஓசூர், மதுரை, திருநெல்வேலி, விருதுநகர், கடலூர் நுண்ணறிவு, திருச்சி நுண்ணறிவு, மற்றும் திருவாரூர் நுண்ணறிவு.<br>(இணைப்புகளுடன்) (மின் அஞ்சல் வாயில |

**கடித எண் எச்–1 /6698959 /2024 , நாள்: 08-2-2024**

அய்யா/அம்மையீர்,

பொருள் : பொதுப்பணிகள் – வணிகவரித்துறை – இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கான 41 பணிநாட்கள் கொண்ட பவானிசாகர் சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி 60–வது அணியாக (13–02–2024 முதல் 01–04–2024) – பவானிசாகர் பயிற்சி மையத்தில் பயிற்சி அளித்தல் –விவரங்கள் கோருவது – தொடர்பாக.

பார்வை : முதல்வர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம் பவானி சாகர், அவர்களின் கடித எண்: அ3/266/2024, நாள்: 23-01-2024. [இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்: 08-02-2024]

******

பார்வையில் காணும் கடிதத்தின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பார்வையில் காணும் கடிதத்தில் அரசு அலுவலர் பயிற்சி நிலைய முதல்வர் அவர்கள், பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கான 41 பணிநாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப்பயிற்சி 60–வது அணியாக 13–02–2024 முதல் 01-04-2024 வரை நடைமுறைப்படுத்தப்பட உள்ளதெனவும் 40 பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட உள்ளதாகவும், பயிற்சி பெற வேண்டிய பணியாளர்களை 12–02–2024 முற்பகல் 9.00 மணிக்குள் பவானிசாகர் பயிற்சி மையத்தை அடையும் வண்ணம், பணியிலிருந்து விடுவிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பார்வையில் இரண்டில் காணும் கடிதத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு துறைத் தலைவரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்கள் மற்றும் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்ற இளநிலை உதவியாளர்களை, அவர்களின் பணி வரன்முறை ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரை காத்திருக்காமல், முதுநிலை அடிப்படையில் அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகரில் வழங்கப்படும் அடிப்படை பயிற்சிக்கு அனுப்பி வைக்குமாறு துறை தலைவர்களை அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

4. இந்நேர்வில் இணைப்பில் முதுநிலையில் உள்ள 80 பணியாளர்களின் (பணிவரன்முறை செய்யப்பட்டவர்கள் / பணிவரன்முறை செய்யப்படாதவர்கள் பெயர்கள் தற்போது நடைபெறும் 60-வது அணி பயிற்சிக்கு பரிந்துரை செய்யப்படும் பட்சத்தில், பயிற்சியில் கலந்துகொள்ளவேண்டும் என்ற உத்திரவாதத்தினை அவர்களிடமிருந்து பெற்று 09-02-2024 ~~பிற்பகல் 12-30~~ முற்பகல் 11-00 மணிக்குள் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. மேலும், முதுநிலையில் வரிசை எண் 80-க்குள், ஏதேனும் பெயர்கள் விடுபட்டிருப்பின் அதன் தொடர்பான அறிக்கையும் அனுப்புமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.

6. <u>இது மிக மிக அவசரம்,</u>

ஒம்/-- சு சிவப்பிரியா
வணிகவரி ஆணையருக்காக

நகல்

1. கண்காணிப்பாளர், ஒய் பிரிவு, வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை.
2. இருப்புக் கோப்பு /எச் 1.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

M. M 8/2/24
கண்காணிப்பாளர்
08/02/2024